# கற்றலில் குறைவான ஆற்றலுடைய மாணவர்களும், வழிகாட்டல் ஆலோசனை சேவையின் தேவையும்: தெரிவு செய்யப்பட்ட மண்முனை தென்மேற்குக் கோட்ட சிரேஷ்ர இடைநிலைப் பிரிவு மாணவர்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**B.Soba**
Dept. of Education &Childcare, EUSL.
*balasundaramsobana@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்:** கற்றலில் குறைபாடுடையோருக்கு வழிகாட்டல் ஆலோசனை சேவை எந்தளவுக்கு தேவையான ஒன்றாகக் காணப்படுகின்றது என்பதை இனங் காணுவதற்காகவே மட்டக்களப்பு மாவட்டத்தின் யுத்தம், வறுமை, இயற்கை அனர்த்தம் போன்றவற்றின் பாதிப்புக்களுக்கு முகம் கொடுத்த மண்முனை தென் மேற்குக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வுக்கெனத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் சிரேஷ்ர இடைநிலைப்பிரிவு மாணவர்கள் கற்றலில் பல்வேறு சிக்கல்களையும், இடர்பாடுகளையும் எதிர்கொள்கின்றனர். இவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு வீட்டுச் சூழல், பாடசாலைச் சூழல், மாணவர்களின் தனிப்பட்ட காரணங்கள் போன்றன எவ்வாறு காரணிகளாக அமைகின்றன, இவற்றுக்கு வழிகாட்டும் வகையில் பாடசாலை வழிகாட்டல் சேவை எந்தளவுக்கு நடைமுறைச் செயற்பாடு கொண்டதாக செயற்படுகின்றது, மேலும் அதனை சிறப்பாகச் செயற்படுத்த எவ்வாறான உத்திகளை கையாள வேண்டும். போன்றவற்றை ஆராய்ந்து இம்மாணவர்கள் எதிர்நோக்கும் கற்றல் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான விதப்புரைகளை ஆய்வு நோக்கில் தெளிவுபடுத்துவதுடன், இம்மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை துரிதப்படுத்தி கற்றலில் ஆர்வத்துடன் ஈடுபட உதவும் வகையில் இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வானது முதனிலை, இரண்டாம் நிலை தரவு மூலாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு பண்புசார், அளவுசார் தரவுகளின் அடிப்படைகளில் அளவைநிலை ஆய்வாக வடிவமைக்கப்பட்டதோடு, தரவு, தகவல்கள் யாவும் ஒழுங்கமைக்கப்பட்டு விபரணப்பகுப்பாய்வு முறையில் முடிவுகள் கண்டறியப்பட்டுள்ளன. இம்மாணவர்களில் 83மூ மாணவர்கள் கற்றலில் குறைபாடுடையோராகக் காணப்படுகின்றமையும், இவர்களில் பெரும்பாலான மாணவர்கள் கற்பித்தலை விளங்கிக் கொள்ள முடியாத தன்மையுடையவர்களாக உள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளது. அத்தோடு வழிகாட்டல் ஆலோசனை சேவையை மேலும் நடைமுறைச் செயற்பாடு கொண்ட முறையில் அமுல்படுத்தி மாணவர்களுக்கான வழிகாட்டல், ஆலோசனைகளை வழங்க வேண்டிய தேவை அவசியமாக உள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளது. ஆய்வுப் பிரதேசத்தில் 21 பாடசாலைகள் காணப்பட்ட போதிலும் 1 AB, 1C பாடசாலைகள் 5 ஆய்வு மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டதோடு, அதிபர்கள் - 5, ஆசிரியர்கள் - 45, 5 ஆலோசகரிடமிருந்து வினாக்கொத்து, நேர்காணல் முறைகள் மூலம் தகவல்கள் பெறப்பட்டன. அத்தோடு சிரேஷ்ர இடைநிலைப் பிரிவு 125 மாணவர்களும் ஆய்வுக் குடித்தொகையில் மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து பெறப்பட்ட தரவுகளிலிருந்து சிரேஷ்ர இடைநிலைப்பிரிவு மாணவர்கள் கற்றல் குறைபாடுடையவர்களாக உள்ளமையும், வழிகாட்டல் ஆலோசனை சேவையின் தேவையும் உணரப்பட்டதுடன் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் சார்பாக தீர்வாலோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

**முநலறழசனள**: கற்றலில் குறைவான ஆற்றலுடையோர், கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள், வழிகாட்டல் ஆலோசனைச் சேவை, சிரேஷ்ர இடைநிலைப்பிரிவு மாணவர்கள்.

## 1.0 ஆய்வு பற்றிய அறிமுகம்

### 1.1 ஆய்வு அறிமுகம்

பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் பல்வேறு விதமான செயற்பாடுகளில் கற்றல் கற்பித்தல் செயற்பாடே பிரதான வகிபங்கை வகிக்கின்றது. இந்த வகையில் வரையறுக்கப்பட்ட இலக்குகளையும், நோக்கங்களையும் கலைத்திட்ட அமுலாக்ககத்தினூடாக மாணவர்களிடத்தில் உருவாக்கும் வகையில் பாடசாலைச் செயற்பாடுகள் அமைந்துள்ளன. இவற்றைத் திருப்தி கரமாக முன்னெடுப்பதற்கு மாணவர்களின் கற்றல் செயற்பாடு உயர்வானதாக இருக்க வேண்டும். ஆனால் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பாடசாலைகளில் சிரேஷ்ர இடைநிலை மாணவர்களிடையே கற்றலில் குறைவான ஆற்றலுடைய மாணவர்கள் பலர் காணப்படுவதோடு, கற்றல் செயற்பாடுகளும் மிகவும் மந்தமாகவும், பின்னடைந்த நிலையிலும் காணப்படுவதனால் அம்மாணவர்களுக்கான வழிகாட்டல் ஆலோசனைச் சேவையின் தேவை மிகவும் அவசியமானதாகவும், வேண்டப்படும் ஒன்றாகவும் உள்ளது.

சாதாரண மாணவர்கள் கற்பதை விட கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் போது சிரமப்படுபவர்களை கற்றலில் இடர்படுகின்ற மாணவர்கள் எனக் கருத முடியும். இம்மாணவர்கள் பொதுவாக உளவளர்ச்சியில் பின்தங்கியிருத்தல், புலங்கள் ரீதியான குறைபாடுடையவர்களாக இருத்தல், பிறழ்வான நடத்தையுடையோர், கற்றலில் குறைவான ஆற்றலுடையோர் என பல்வேறு நிலைகளில் உள்ளனர். இவ்வகையில் கற்றலில் குறைவான ஆற்றலுடைய மாணவர்கள் வகுப்பறை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் மிகவும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.
இவ்வகையில் இவ்வகையான பாதிப்புக்களை எதிர் கொள்ளும் கற்றலில் குறைபாடுடைய மாணவர்களுக்கு வழிகாட்டல் ஆலோசனை சேவையினூடாக அவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**1.2 ஆய்வுப் பிரச்சினைகள்.**

கல்வி தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகள் மாணவர்களுக்கு மட்டுமல்லாது மாணவர்களைச் சார்ந்து நிற்கும் சமுதாயத்தையும் பாதிக்கின்றது. இப்பிரச்சினையே ஆய்வுக்குரிய பொருளாகின்றது. இந்தவகையில் பாடசாலைகளில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்ற போதிலும் குறிப்பாக சிரேஷ்ர இடைநிலை மாணவர்கள் கற்றலில் குறைபாடுடையோராவே காணப்படுகின்றமையினால் இம்மாணவர்களுக்கு வழிகாட்டல் ஆலோசனை சேவையின் பங்களிப்பு மிகவும் அவசியமான ஒன்றாக தேவைப்படுகின்றது.

ஆய்வுப் பிரதேசமானது பின்தங்கிய பிரதேசமாக இருப்பதோடு, யுத்தம், வறுமை போன்ற பாதிப்புக்களை எதிர் கொண்டமையினால் இம்மாணவர்கள் கற்றல் குறைபாடுடையோராக, கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.
ஆய்வுக்குட்படுத்திய பாடசாலை மாணவர்கள் கற்பிக்கும் விடயங்களை விளங்கிக் கொள்வதில் சிக்கல்களை எதிர்கொள்ளுதல்.
மாணவர்கள் மொழியைப் பயன்படுத்துவதில் அக்கறையற்ற நிலையில் உள்ளமையும், கேட்டல், வாசித்தல் எழுதுதல் தொடர்பாக பல்வேறு குறைபாடுடையோராகக் காணப்படல்.
இப்பிரதேச மக்கள் வருமானம் குறைந்தவர்களாகக் காணப்படுவதனால் பிள்ளைகளின் கல்விக்கு மேலதிக வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்காமையினால் பிள்ளைகள் கற்றலில் பின்னடைவாகவே உள்ளனர்.
பாடசாலைகளில் கற்பித்தலுக்குப் பொருத்தமான சாதனங்கள், ஆய்வு கூட வசதிகள் போன்றன போதுமானளவு இல்லாமையினால் ஆசிரியர்களால் பொருத்தமான கற்பித்தல் முறைகளையும் நுட்பங்களையும் கையாள முடியாதுள்ளமையினால் மாணவர்கள் கற்றலில் பின்னடைவாகவே உள்ளனர்.
இப்பருவ மாணவர்கள் கறறலில் ஆர்வமின்றிக் காணப்படுவதோடு, பொழுதை வீணாகக் சகபாடிகளுடன் கழிப்பதிலும், கையடக்கத் தொலைபேசியிலும் வீணடிப்பதாகக் காணப்படுவதால் சிந்திக்கும் திறன் குறைபாடுடையவர்களாகவே காணப்படுகின்றனர்.

**1.3 ஆய்வின் பிரதான நோக்கம்.**

கற்றலில் குறைவான ஆற்றலுடைய மாணவர்கள் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் எவ்வாறான இடர்பாடுகளை எதிர்நோக்குகின்றனர் என்பதனைக் கண்டறிந்து அவற்றுக்குத் தீர்வு காணும் முகமாக வழிகாட்டல் ஆலோசனை சேவையின் பங்களிப்பினை எடுத்துக் காட்டுதல்.

**உப நோக்கங்கள்**

1) சிரேஷ்ர இடைநிலை மாணவர்களின் கற்றல் குறைபாடு சார்பில் எவ்வகையான பிரச்சினைகளை எதிர் கொள்கின்றனர் என்பதனை இனங்காணுதல்.

2) இம்மாணவர்கள் கற்றலில் குறைபாடுடையோராகக் காணப்படுவதற்கான காரணங்களைக் கண்டறிதல்.

3) பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனை சேவை சிறப்பான முறையில் செயற்பாட்டில் உள்ளதா? என்பதை மதிப்பிடல்.

4) கற்றலில் குறைபாடுடையோரின் கற்றல் செயற்பாடுகளை மேம்படுத்த வழிகாட்டல் ஆலோசனை சேவை எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்ற அறிவுறுத்தல்களையும், ஆலோசனைத் தீர்வுகளையும் முன்வைத்தல்.

## 2.0 இலக்கிய மீளாய்வு (Literature Review)

இவ்வாய்வினை மேற்கொள்வதற்காக ஆய்வுத் தலைப்புடன் தொடர்புபட்ட நூல்கள், கட்டுரைகள், சஞ்சிகைகள், வாழ்வியற் களஞ்சியங்கள், குறிப்புக்கள், சுற்றறிக்கைகள் மற்றும் பல்வேறு ஆவணங்கள் என அனைத்து வெளியீடுகளையும் தேடிக்கண்டு பிடித்து பல்வேறு தலைப்புக்களில் இலக்கிய மீளாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
கற்றல் பற்றிய அறிஞர்களின் கருத்துக்கள், கல்வியின் நான்கு தூண்கள், கற்றலைப் பாதிக்கும் காரணிகள், கற்றல் இடர்பாடுகள், கற்றலில் குறைவான ஆற்றலுடையோர், வழிகாட்டல் ஆலோசனை தொடர்பான எண்ணக்கரு விளக்கம், வழிகாட்டல் ஆலோசனைச் சேவையின் பிரதான பரப்புக்கள், பாடசாலை வழிகாட்டல் சேவையின் தேவை, முக்கியத்துவம் போன்றவாறான பல்வேறு விடயங்கள் யாவும் சஞ்சிகைகள், அவை தொடர்பான நூல்களிலிருந்து பெறப்பட்டு இலக்கிய மீளாய்வுச் செயற்பாடு இடம் பெற்றுள்ளது.

## 3.0 ஆய்வு முறையியல்(Methodology)

ஆய்வு முறைமை சிறப்பாகக் காணப்படும் பட்சத்திலேயே தீர்வுகள் நம்பகத்தன்மையானதாகக் காணப்படும். இந்த ஆய்வு முறையில் ஆய்வினை மேற்கொள்ள தகவல்கள் எவ்வாறு பெறப்பட்டன, மாதிரித்தெரிவு எவ்வாறு இடம் பெற்றது, எந்த ஆய்வுமுறை பயன்படுத்தப்பட்டது, தரவு சேகரிக்க எவ்வாறான கருவிகள் பயன்படுத்தப்பட்டன, ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்கள், தரவுப்பகுப்பாய்வு முறைகள் என்பன தொடர்பான விடயங்கள் இவ்வாய்வு முறையியலில் உள்ளடக்கப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இந்த வகையில் இவ்வாய்வானது அளவைநிலை ஆய்வாக மேற்கொள்ளப்பட்டதோடு, இவ்வாய்வின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் முதன்மைத்தரவுகள் (primary data), இரண்டாம்நிலைத் தரவுகள் (secondary date) போன்றவற்றினூடாக தரவு தகவல்கள் பெறப்பட்டு இவ்வாய்வு முன்னெடுத்துச் செல்லப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

### 3.1 தரவு சேகரித்தல் கருவிகளும், நுட்பங்களும்

இவ்வாய்வின் தரவுப்பகுப்பாய்வு முறைகள் எண்ரீதியானதும் பண்புரீதியானதுமான தரவுகளை அடிப்படையாகக் கொண்டு அமையப்பெறுகின்றமையினால் முதன்மைத் தரவுகளே இவ்வாய்வினை வழிநடத்திச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தவகையில் முதன்மைத்தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்கென வினாக்கொத்து, நேர்காணல், அவதானம் போன்ற ஆய்வுக் கருவிகள் பயன்படுத்தப்பட்டு தரவுகள் ஆய்வாளனால் சேகரிக்கப்பட்டன.

**1. வினாக்கொத்து–** ஆய்வின் ஒவ்வொரு நோக்கத்தினையும் தெளிவுபடுத்தக் கூடிய வகையிலும், தர ரீதியானதும் பண்பு ரீதியானதுமான கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளும் வகையிலும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கான வினாக்கொத்து தயாரிக்கப்பட்டு அதன் மூலம் தரவுகள் பெறப்பட்டு பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.**2.நேர்காணல்-** மேலும் தரவுகள் அதிபர், ஆலோசகரிடமிருந்து நேர்காணல் மூலமும் திரட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.. **3.அவதானம் (உற்று நோக்கல்)முறை-** இங்கு நேரடியான அவதானிப்பு முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

### 3.2 ஆய்வுக் குடித்தொகையும் மாதிரிஎடுப்பும்

ஆய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்ட பிரதேசமானது மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட மண்முனை தென்மேற்குக் கோட்டமாகும். இங்கு 21 பாடசாலைகள் காணப்படுகின்ற போதிலும் நிகழ்தகவற்ற வசதி மாதிரி அடிப்படையில் 5 பாடசாலைகள் (1AB, 1C) தெரிவு செய்யப்பட்டுள்ளது.
மட்/ ம.மே அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயம் - A
மட்/ ம.மே முதலைக்குடா மகா வித்தியாலயம் - B
மட்/ ம.மே மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயம் - C
மட்/ ம.மே அரசடித்தீவு விக்கினேஸ்வரா வித்தியாலயம் - D
மட்/ ம.மே கொக்கட்டிச்சோலை இ. கி. மி வித்தியாலயம் - E

**அட்டவணை 3.1 ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள்.**

| | | | தரம் 10 | | தரம் 11 | |
|---|---|---|---|---|---|---|
| பா.லை | தரம் | ஆசிரியர்களின்.எ | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| A | 1AB | 41 | 29 | 28 | 49 | 48 |
| B | 1AB | 34 | 22 | 26 | 37 | 54 |
| C | 1C | 32 | 21 | 25 | 42 | 67 |
| D | 1C | 42 | 41 | 39 | 59 | 78 |
| E | 1C | 34 | 32 | 23 | 16 | 26 |
| Total | | 183 | 145 | 141 | 203 | 273 |

ஆதாரம் :- வலயக் கல்வி அலுவலகம்,(மட்டக்களப்பு மேற்கு).

ஆய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் 5 அதிபர்கள், 183 ஆசிரியர்கள்5 ஆலோசகரிடமிருந்து வினாக்கொத்து, நேர்காணல் முறைகள் மூலம் தகவல்கள் பெறப்பட்டன.

சிரேஷ்ர இடைநிலைப் பிரிவு தரம் 10 வகுப்பைச் சேர்ந்த 145 ஆண் மாணவர்களில் 1:5 என்ற வீதத்தின் அடிப்படையில் 29 மாணவர்களும்,141 பெண் மாணவர்களில் 1:5 என்ற வீதத்தின் அடிப்படையில் 28 மாணவர்களும், தரம் 11 வகுப்புகளைச் சேர்ந்த 203 ஆண் மாணவர்களின் 1:5 என்ற வீதத்தின் அடிப்படையில் 40மாணவர்களும்,273 பெண் மாணவர்களில் 1:5 என்ற வீதத்தின்

அடிப்படையில் 55 மாணவர்களுமாக 152 மாணவர்கள் ஆய்வுக் குடித்தொகையில் மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

### 3.3 மாதிரி தெரிவு முறை


**அட்டவணை 3.2 ஆய்வின் குடித்தொகைகள்**

| குடித்தொகை | எ.கை | மாதிரிமுறை | மாதிரி |
|---|---|---|---|
| ம. தென்மேற்கு கோ. பாடசாலை | 21 | வசதி மாதிரி | 05 |
| அதிபர்கள் | 05 | - | 05 |
| ஆசிரியர்கள் | 183 | இ.எ மாதிரி (4:1) | 46 |
| மாணவர்கள் | 762 | இ.எ மாதிரி(5.1) | 152 |

### 4.0 தரவுகளை முன்வைத்தலும் பகுப்பாய்வும்

கற்றலில் குறைவான ஆற்றலுடைய மாணவர்களும், வழிகாட்டல் ஆலோசனை சேவையின் தேவையையும்அறிந்து கொள்ளும் பொருட்டு பல்வேறுபட்ட விடயங்கள், பல்வேறு வழிகளிலும் வினவப்பட்டன.இதன்படி,

ஆய்வின் முதலாவது நோக்கத்தை அறியும் பொருட்டு ஆசிரியர்களின் கருத்துக்களினூடாக அறியப்பட்ட விடயங்களாவன, சிரேஷ்ர இடைநிலைப்பிரிவு மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொள்கின்றமை சுட்டிக்காட்டியுள்ளனர்.இந்தவகையில் சிரேஷ்ர இடைநிலைப்பிரிவு மாணவர்களில் 83% மாணவர்கள் கற்றலில் பல்வேறு குறைபாடுடையவர்களாகக் காணப்படும் அதேவேளை 27% மாணவர்கள் சாதாரண நிலையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவதாகவும் இனங்காட்டியுள்ளனர்.இதனை பின்வரும் வரைபு காட்டுகின்றது.




உரு4.1

இவ் வரைவின் படி மாணவர்கள் கற்றல் குறைபாடுடையவர்களாக உள்ளமையைக் காணலாம். இந்தவகையில் மாணவர்கள் எவ்வகையான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் என்பதனை பின்வரும் அட்டவணை மூலம் எடுத்து நோக்கலாம்

அட்டவனை 4.1 கற்றல் குறைபாடு சார்பில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்

| காரணம் | ப.எ | வீ |
|---|---|---|
| கற்பித்தலை விளங்கிக்கொள்ள முடியவில்லை | 22 | 48 |
| மொழியைச் சரியாக புரிந்து கொள்ளாமை. | 6 | 13 |
| தொடர்பாடலில் பின்தல்லியிருத்தல். | 8 | 17 |
| வாசித்தல், எழுதுதல் குறைபாடுகள் | 10 | 22 |
| மொத்தம் | 46 | 100 |

இவ்வாறாக மாணவர்கள் கற்றலில் குறைபாடுடையோராகக்காணப்படுவதற்கான காரணங்களை அறிந்த கொள்ளும் பொருட்டு மாணவர்களிடம் அது தொடர்பாக வினாவப்பட்டு அவை மூலம் பெற்றுக் கொண்ட துலங்கள்கள் பின்வரும் அட்டவனை மூலம் விளங்கிக் கொள்ள முடிகின்றது.

| வினா இல 01 | காரணம் | தரம் 10 | | தரம் 11 | |
|---|---|---|---|---|---|
| | | ப.எ | வீ | ப.எ | வீ |
| நீங்கள் கற்றல் செயற்பாடுகளில் ஆர்வமின்றிக் காணப்படுவதற்கான காரணமாக எதனைக் கருதுகின்றீர்கள்? | வீட்டுச்சூழல், வறுமை, பெற்றோர் கவனம் செலுத்தாமை. | 32 | 56% | 64 | 63% |
| | பாடசாலை சூழல் கற்பித்தல் செயற்பாடுகள் போதிய வளங்கள் இல்லாமை. | 8 | 14% | 12 | 12% |
| | தனிப்பட்ட காரணம் (நண்பர்களுடன் நேரத்தை வீண்அடித்தல், கையடக்க தொலைபேசி பாவணை) | 17 | 30% | 25 | 25% |

வழிகாட்டல் ஆலோசனை சேவை பாடசாலையில் சிறப்பாக தொழிற்படுவது தொடர்பாக நேர்காணல் மூலம் பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டுள்ளது. இந்தவகையில் வழிகாட்டல் ஆலோசனை சேவையில் ஆலோசகராகப் பணியாற்றும் ஆலோசகரிடம் பின்வருமாறு வினாவப்பட்டது அதாவது கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் கற்றலில் குறைபாடுடையோரை

இனம்கண்டு அம்மாணவர்களுக்கு வழிகாட்டல் ஆலோசனை சேவை வழங்குகின்றீர்களா? என்பது தொடர்பாக வினாவப்பட்டபோது ஓரளவுக்கே விழங்க முடிவதாக கூறியுள்ளார். இதற்குக் காரணங்களாக கற்றலில் குறைவான ஆற்றலுடைய மாணவர்களை இனம்கண்டு அவர்களுக்கு சில ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கும் போது அவர்கள் தங்களுக்கு முற்றாக ஒத்துழைப்பு வழங்குவதில்லை எனவும், தங்களின் பாட நேரசூசியில் இச்சேவையை வழங்குவதற்கு நேரம் ஒதுக்கப்படாமையினால் தொடர்ச்சியாக இவர்களுக்கான பரிகாரங்களை செய்ய முடியாதுள்ளமையையும் இனங்காட்டியுள்ளனர். இதிலிருந்து பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவை சிறப்பான முறையில் இயங்காதுள்ளமையை அறிய முடிகின்றது.

**5.0 ஆய்வின் மூலமான கண்டறிதல்களும், ஆலோசனைகளும்**

**5.1 கண்டறிதல்கள்**

ஆய்வின் நோக்கங்களுக்கு ஏற்ப அதிபர்,ஆசிரியர்கள், ஆலோசகர்கள், மாணவர்கள் ஆகியோரிடமிருந்து பெறப்பட்ட தரவுகளின் தொகுப்பை நோக்கும் போது 83% மாணவர்கள் கற்றலில் குறைபாடுடையோராகக் காணப்படுவது கண்டறியப்பட்டுள்ளது.

கற்றலில் குறைபாடான ஆற்றலுடைய மாணவர்கள் பல்வேறு வகையான கற்றல் இடர்பாடுகளை எதிர்நோக்குகின்றனர்.

இம்மாணவர்கள் எதிர் நோக்கும் கற்றல் குறைபாடுகளில் மொழியைச் சரியாக புரிந்து கொள்ளாமை, கேட்டல், எழுதுதல், வாசித்தல் குறைபாடுகள் காணப்பட்டாலும் அதிகமான மாணவர்களிடையே (48%) கற்பித்தலை விளங்கிக் கொள்ள முடியாத தன்மை காணப்படுவது ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. மாணவர்கள் கற்றலில் குறைபாடுடையோராக காணப்படுவதற்கு வீட்டுச்சூழல், பாடசாலைசூழல், தனிப்பட்டசூழல் காரணிகள் செல்வாக்குச் செலுத்தினாலும் 56% மான மாணவர்களுக்கு வீட்டுச் சூழல் காரணிகளே காரணமாக அமைந்துள்ளன.

இந்தவகையில் மாணவர்களின் வீட்டுச் சூழல் கற்றலுக்கு பொருத்தமாக அமைந்திராமை, வறுமை காரணமாக பெற்றோர் வெளிநாடு சென்றிருத்தல், தந்தைமாரின் பிறழ்வான நடத்தைகள் (மது பழக்கம்) போன்ற பல காரணங்களும் மாணவர்களின் கற்றல் பின்னடைவுக்கு கூடியளவில் செல்வாக்கு செலுத்துவது ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

## 5.2 ஆலோசனைகள்

நடைமுறைச் செயற்பாடு கொண்ட வழிகாட்டல் ஆலோசனை சேவையை அதிபர் ஏற்படுத்திக் கொடுப்பது கட்டாயமானதாகும்.

இனங்காணப்பட்ட கற்றலில் குறைபாடுடைய மாணவர்களுக்கான தீர்வினைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் ஆலோசகருக்கான நேரத்தை ஒதுக்கிக் கொடுக்க வேண்டும்.

மாணவர்களின் கற்றலில் பின்னடைவை தடுக்கும் வகையில் அதிபர், ஆசிரியர்கள், ஆலோசகர் என்பவர்களுடன் பெற்றோரும் இணைந்து செயற்படுவதன் மூலமே மாணவர்களின் கற்றலில் விருத்தியை ஏற்படுத்த முடியும்.

இந்தவகையில் பெற்றோருக்கு பிள்ளைகளின் கல்வி தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் ஒவ்வொரு செயற்பாடுகளிலும் பெற்றோரின் பங்களிப்பை அதிகரிப்பதற்கு வழிகாட்டல் ஆலோசனை சேவையில் பெற்றோர்களையும் இணைத்துக் கொண்டு செயற்படுவதன் மூலம் பெற்றோரின் பங்களிப்பை அதிகரிப்பதோடு மாணவர்கள் கற்றலில் எதிர்கொள்ளும் சிக்கல்களும் குறைபடும்.

**முடிவுரை**

நவீன மயமான இன்றைய நிலையில் உலக சந்தை போட்டி நிலையை முன்னெடுத்துச் செல்லும் ஒன்றாக கல்வியின் போக்கு காணப்படுகின்றது. இந்நிலையில் சிரேஷ்ர இடைநிலைப் பிரிவு மாணவர்கள் வீட்டுச் சூழல், பாடசாலைச் சூழல், தனிப்பட்ட காரணிகள் போன்ற பல்வேறு காரணங்களினால் கற்றலில் குறைபாடுடையோராக உள்ளனர். இப்பருவத்திலே பல்வேறு விதமான

உடல், உள மாற்றங்களும், பிரச்சினைகளும் இவர்களைத் தொடர்ந்த வண்ணமே உள்ளது. இவ்வாறு பிரச்சினைக்கு உள்ளாகும் மாணவர்களுக்கு பெற்றோரின் பங்களிப்பும் குறைந்தளவே உள்ளமையினால் பாடசாலை வழிகாட்டல் ஆலோசனை சேவை கூடிய அக்கறையுடன் நடைமுறைச் செயற்பாடு கொண்டதாக தம்மால் இயன்ற வழிகாட்டல்களையும், ஆலோசனைகளையும் வழங்கி அவர்களை கற்றல் செயற்பாடுகளில் ஆர்வத்துடன் ஈடுபடுத்துவதன் மூலம் இப்பிரதேசத்தை மட்டுமல்லாது நாட்டினையும் நிலைத்து நிற்கும் அபிவிருத்திப் பாதையை நோக்கி பயணிக்கச் செய்ய முடியும் என்பது திண்ணம்.

**உசாந்துணை நூல்கள்**


கருணாநிதி.மா,(2008), கற்றல் கற்பித்தல் மேம்பாட்டுக்கான வழிமுறைகள், சேமமடு பதிப்பகம், கொழும்பு-11.

இலங்கை திறந்த பல்கலைக்கழகம், (2010),கல்வி வழிகாட்டலும் ஆலோசனை கூறலும் வழிகாட்டலும் ஆலோசனை சேவையும், தொகுதி- 11.

தனபாலன்.பா, ஞானசக்தி. க, (2012), பாடசாலையில் ஆலோசனை வழங்கள், லங்கா பதிப்பகம், கொழும்பு-12.

திருக்குமார். சீ, 2013), பாடசாலை வழிகாட்டல் ஆலோசனையும் தொழில் வழிகாட்டலும், நிதுஸ் பிறின்டஸ், காரைதீவு.

விமலாகிருஷ்ணபிள்ளை, (2003), வழிகாட்டலும் ஆலோசனையும், கே.எஸ் யூ கிராபிக்ஸ், இராஜகிரிய.

றிஸ்வி.ஏ.எல்.எம், (2009), பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவையின் அவசியப்பாடு ஏன் முக்கியத்துவம் பெறுகின்றது,http/www.thinakaran.lk/2009/12/09/-art.asp?fn=fo912093